# நெல் ஈரப்பத அளவை அதிகரிக்காமல் டெல்டா விவசாயிகளை வஞ்சிக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்து தஞ்சையில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!




நெல் ஈரப்பத அளவை அதிகரிக்காமல், நிவாரணமும் அளிக்காமல் டெல்டா விவசாயிகளை வஞ்சிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து 'மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி'களின் சார்பில் தஞ்சாவூரில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாநில விவசாய அணி செயலாளரும், தமிழக அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதியுமான ஏ.கே.எஸ்.விஜயன் தலைமை வகித்தார், இதில் மாவட்ட கழக செயலாளர்கள் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ, சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ, தி.பழநிவேல், க.வைரமணி, மாநில விவசாய தொழிலாளர் அணி செயலாளர் அன்னியூர் சிவா எம்.எல்.ஏ., முன்னாள் மத்திய இணை அமைச்சர் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம், ச.முரசொலி எம்.பி, முன்னாள் எம்.பி. செ.இராமலிங்கம், சட்டமன்ற உறுப்பினர்கள் டி.கே.ஜி.நீலமேகம், கா.அண்ணாதுரை, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் து.செல்வம், எம்.ராமச்சந்திரன், கே.டி.மகேஷ் கிருஷ்ணசாமி, மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழகன், சண்.இராமநாதன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியின் நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர்.

## ஈரோடு மாவட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்கும் நிகழ்ச்சிகள்!

### ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளர் – அமைச்சர் சு.முத்துசாமி அறிக்கை!

ஈரோடு, நவ. 24-

ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளர் - அமைச்சர் சு.முத்துசாமி அறிக்கை வருமாறு:-



கழக தலைவரும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சருமான தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் ஈரோடு மாவட்டத்திற்கு அரசு நிகழ்ச்சி மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள 25.11.2025 செவ்வாய்க்கிழமை 26.11.2025 புதன்கிழமை அன்று வருகை தரவுள்ளார். அந்நிகழ்ச்சிகள் கீழ்க்கண்ட அட்டவணைப்படி நடைபெறவுள்ளது.

எனவே இந்நிகழ்ச்சியில் ஈரோடு ஒருங்கிணைந்த மாவட்டத்திற்குட்பட்ட மாநில, மாவட்ட, மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு, கிளைக் கழகம் மற்றும் அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், சிறப்பு அழைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், BLC, BDA, BLC மற்றும் கழக தோழர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

25.11.2025 மாலை 5.30 மணிக்கு விஜயமங்கலம் டோல்கேட்டில் வரவேற்பு

25.11.2025 மாலை 6.00 மணிக்கு பெருந்துறையில் வரவேற்பு

25.11.2025 மாலை 6.30 மணிக்கு மேட்டுக்கடையில் வரவேற்பு

25.11.2025 மாலை 7.00 மணிக்கு காளிங்கராயன் இல்லத்தில் இரவு தங்குதல்

26.11.2025 காலை 9.00 மணிக்கு திண்டலில் வரவேற்பு

26.11.2025 காலை 9.15 மணிக்கு முள்ளாம்பரப்பில் வரவேற்பு

26.11.2025 காலை 9.30 மணிக்கு அவல்பூந்துறையில் வரவேற்பு

26.11.2025 காலை 9.45 மணிக்கு ஜெயராமபுரத்தில் மாவீரன் பொல்லான் சிலை மற்றும் மணிமண்டபம் திறப்புவிழா

26.11.2025 காலை 10.30 மணிக்கு ஓடாநிலையில் தியாகி தீரன் சின்னமலை அவர்களின் நினை விடத்தில் மரியாதை செய்தல் 26.11.2025 காலை 11.30 மணிக்கு சோலார் ரவுண்டானா வில் வரவேற்பு

26.11.2025 காலை 11.45 மணிக்கு சோலாரில் சோலார் பேருந்து நிலையத்தில் (அரசு நிகழ்ச்சி) 26.11.2025 மதியம் 1.00 மணிக்கு ஈரோடு காளிங்கராயன் இல்லத்தில் மதிய உணவு 26.11.2025 மாலை 5.00 மணிக்கு சித்தோடு ஆவின் பால் பண்ணையில் திரு எஸ்.கே.பரசிவன் அவர்களின் சிலை திறப்பு விழா

26.11.2025 மாலை 6.00 மணிக்கு சித்தோடு கொங்கு மாளிகையில் திருமண வரவேற்பு 26.11.2025 மாலை 6.15 மணிக்கு கோவை விமான நிலையம் புறப்படுகிறார்.

இவ்வாறு ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளரும் வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சருமான சு.முத்துசாமி கூறியுள்ளார்.



சேலம் முன்னாள் மாவட்ட தி.மு.க செயலாளரும். முன்னாள் அமைச்சருமான வீரபாண்டி ஆறுமுகத்தின் 13 ம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி பூலாவரியில் உள்ள அவரின் நினைவிடத்தில் சேலம் மத்திய மாவட்ட கழக செயலாளர். அமைச்சர். இரா. இராஜேந்திரன், சேலம் கிழக்கு மாவட்ட கழக செயலாளர். எஸ். ஆர். சிவலிங்கம். எம்.பி. மாநில தகவல் தொழில் நுட்ப அணி துணைச் செயலாளர். டாக்டர். ஏ.கே. தருண். கிழக்கு மாவட்ட துணைச்செயலாளர்கள். கே. சுரேஷ்குமார், கு. சின்னதுரை. கிழக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர். டாக்டர் பிரபு. மாவட்ட கைத்தறி நெசவாளர் அணி அமைப்பாளர். ஏ ஏ. ஆறுமுகம். அவை தலைவர். மு.ரா. கருணாநிதி. வீரபாண்டி ஒன்றிய செயலாளர் வெண்ணிலா சேகர் மேட்டூர். ப கோபால். வீரபாண்டி. ஆறுமுகம் மகள்கள். மகேஸ்வரி. நிர்மலா. பேத்தி. மலர்விழி ராஜா உட்பட கழக நிர்வாகிகள் நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.

## கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி அவசர செயற்குழுக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. அறிக்கை!

கிருஷ்ணகிரி, நவ. 24-

நவ. 27 இளைஞர் எழுச்சிநாளைமுன்னிட்டு கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டதிமுகஇளைஞரணி சார்பாக அவசர செயற்குழு கூட்டம் இன்று (24-11-2025 திங்கட்கிழமை) காலை 09-30 மணிக்கு கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட திமுக அலுவலகத்தில் நடைபெற உள்ளது.



இந்த கூட்டம் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும், பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான தே. மதியழகன் எம்எல்ஏ அவர்கள் தலைமையில் நடைபெற உள்ளது.

இந்த கூட்டத்தில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட இளைஞரணி மாவட்டஅமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர், துணைஅமைப்பாளர்கள் ஆகியோர் இந்த கூட்டத்தில் கலந்து கொண்டு இளம் தலைவர் அவர்களது பிறந்தநாளை சிறப்பாக கொண்டாடுவது தொடர்பாக கருத்துக்களை தெரிவித்து சிறப்பிக்கவேண்டுமெனகேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இந்த கூட்டத்தில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய,நகர,பேரூர்கழக செயலாளர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொள்ள வேண்டும் என்று மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. கேட்டுக் கொண்டுள்ளார்.

### திருவள்ளூர் மேற்கு மாவட்டம்

## பூண்டி மேற்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு

திருவள்ளூர் மேற்கு மாவட்டம், பூண்டி மேற்கு ஒன்றியச் செயலாளர் கிறிஸ்டி (எ) அன்பரசு அவர்களுக்குப் பதிலாக **தா.மோதிலால்** (18, நெய்வேலி கிராமம் & அஞ்சல், திருவள்ளூர் மாவட்டம் 602 023) அவர்கள் பூண்டி மேற்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை 18.
நாள் : 22.11.2025.

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்,
தி.மு.க.

### சென்னை மாநகர் போக்குவரத்துக் கழகம் சார்பில்

## "பேருந்துகளுக்கு முன்னுரிமை (BUS FIRST)" எனும் பிரச்சாரம்'!

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

சென்னை, நவ.23–

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 21.11.2025 அன்று சென்னை அண்ணா சதுக்கம் பேருந்து முனையத்தில், மாநகர் போக்குவரத்து கழகத்தின் சார்பில் நடைபெற்ற ”பேருந்துகளுக்கு முன்னுரிமை (BUS FIRST) என்ற பிரச்சாரத்தை தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் மாநகர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளின் பரிணாம வளர்ச்சி மற்றும் சாதனைகளை மக்களுக்கு காட்சிப்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்ட நடமாடும் பேருந்து கண்காட்சியை திறந்து வைத்து பார்வையிட்டு, கண்காட்சி பேருந்து சென்னை மாநகர் முழுவதும் உலா வரும் நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார்.

மேலும், இன்றைய நிகழ்ச்சியில் மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில், ”சென்னை தினம் கொண்டாட்டத்தின் அங்கமான அரசுப் பள்ளி மாணவர்களுக்கான ஓவியப் போட்டி, அனைவருக்குமான கவிதைப் போட்டி (மாநகர் பேருந்து பயணம்), புகைப்படப்போட்டி (என் பயணம், என் கதை) மற்றும் புதையல் வேட்டை உள்ளிட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பரிசுகளை வழங்கினார்.

1972–ஆம் ஆண்டு நிறுவப்பட்ட மாநகர போக்குவரத்துக் கழகம் (MTC), இந்தியாவின் மிகப்பெரிய பொதுப் போக்குவரத்து நிறுவனங்களில் ஒன்றாகும். தமிழ்நாடு அரசின் போக்குவரத்துத் துறையின் கீழ் செயல்படும் மாநகர் போக்குவரத்துக் கழகம், சென்னை மற்றும் அதன் புறநகரப் பகுதிகளில், விரிவான பேருந்து வலையமைப்பு மூலம் தினந்தோறும் சுமார் 34.10 லட்சம் பயணிகளுக்கு சேவை செய்கிறது. சென்னை மக்களின் தேவைக்கு ஏற்ப முழுமையான நகர்ப்புற பேருந்துகள் இயக்கத்தை வழங்குவதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

சென்னையில் பொதுப் போக்குவரத்தை முன்னிலைப்படுத்தி, பொது மக்களின் பயன்பாட்டை ஊக்குவிக்கும் விதமாக மாநகர் போக்குவரத்து கழகத்தின் சார்பில் ”பேருந்துகளுக்கு முன்னுரிமை (BUS FIRST) பிரச்சாரத்தின் சிறப்பு அம்சங்களான குறித்த நேரத்தில் செல்ல வேண்டிய இடத்தை அடைதல், தடைகள் மற்றும் நெரிசல் அற்ற பேருந்து பயணம், குறைந்த உமிழ்வு போன்ற பேருந்து போக்குவரத்து சார்ந்த இயக்கத்தின் நன்மைகள் குறித்த விழிப்பு ணர்வை பொது மக்களிடம் ஏற்படுத்தும் ஒரு முயற்சியே இந்த பிரச்சாரத்தின் நோக்கமாகும்.

அதே நேரத்தில், அனைத்து வழித்தடங்களிலும் மாநகர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் இயக்கத்திற்கு முன்னுரிமை அளிக்க வேண்டிய தன் அவசி யத்தை வலியுறுத்துகின்ற இந்த முயற்சியின் மூலம், பொது மக்கள் பைக், கார் உள்ளிட்ட தனியார் வாகனங்களை தவிர்த்து பொதுப்போக்குவரத்தை பேரு ந்துகளில் பயணம் மேற்கொள்ளவதன் மூலம் ஊக்குவிப்பதையும், தூய்மையான, பாதுகாப்பான மற்றும் நிலையான நகர்ப்புற போக்குவரத்து அமைப்பை உருவாக்குவதையும் முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில், போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், போக்குவரத்துத் துறை அரசு முதன்மைச் செயலாளர் சுன்சோங்கம் ஜடக் சிரு, மாநகர் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் டாக்டர் த.பிரபுசங்கர், சென்னை போக்குவரத்து காவல் கூடுதல் ஆணையர் இ.கார்த்திகேயன், துணை மேயர் மு.மகேஷ்குமார், நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, மாநகர் போக்குவரத்துக் கழக விளம்பர தூதர் கிரிக்கெட் வீராங்கனை திருமதி திருஷ்காமினி, மண்டல குழுத் தலைவர் எஸ்.மதன்மோகன், மாநகர் போக்குவரத்துக் கழக இணை மேலாண் இயக்குநர் இராம. சுந்தரபாண்டியன், உயர் அலுவலர்கள் மற்றும் தொழிற்சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.